**Kalanjiyam International Journal of Tamil Studies**
களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
https://ngmtamil.in/
DOI: https://doi.org/10.63300/kijts04052026

*Article Type: Original Research Article*

# Food Management of Animals and Birds in Sangam Akam Literature

**Dr. V. Parimalam***

*Assistant Professor, Department of Tamil Literature, N.G.M. College, Pollachi.*

*Correspondence: gvelu506@gmail.com, Tel: +916238535465

**Received**: 22-01-2026; **Revised**: 24-01-2026; **Accepted**: 27-01-2026; **Published**: 01-02-2026

**Abstract:** Sangam literature serves as a vivid portrait of human life lived in perfect harmony with nature, where the boundaries between the domestic and the wild are often blurred by shared ecological realities. In accordance with the ethical principle that "the world begins with food" (Undi Mutatre Ulagu), food remains the fundamental necessity for all living beings, ranging from those with a single sense to those with six. This biological imperative serves as the connective tissue between the human protagonist and the surrounding fauna.

This study analyzes the "Food Management" techniques of animals and birds as described within the Sangam "Akam" (Interior) landscapes. By examining the five distinct eco-zones—Kurinji (mountains), Mullai (forests), Marutham (agricultural lands), Neithal (seashore), and Paalai (wasteland)—we uncover sophisticated poetic observations of foraging, hunting, and communal sharing among wildlife.

**Keywords**: Sangam Literature, Akanthinai , Food Management, Eco-Aesthetics,Fauna in Literature, Precision Hunting, Sustainable Storage.

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

# சங்க அக இலக்கியங்களில் விலங்கு, பறவைகளின் உணவு மேலாண்மை

**முனைவர் வெ. பரிமளம்,** உதவிப்பேராசிரியர், தமிழ் இலக்கியத்துறை, என்.ஜி.எம் கல்லூரி, பொள்ளாச்சி.

**முன்னுரை**

உலகில் ஓரறிவு முதல் ஆறறிவு வரை உள்ள பல்வேறு வகையான உயிர்கள் வாழ்கின்றன. உலகில் உள்ள அனைத்து உயிர்களும் வாழ அடிப்படைத் தேவையாக உணவு அமைகிறது. “உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்”, ‘உண்டி முதற்றே உலகு’ போன்ற சொற்கள் உணவின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கின்றன. அவ்வகையில் பழந்தமிழர் தாங்கள் வாழ்ந்த இடங்களை ஐந்திணைகளாகப் பகுத்து நிலத்திற்கேற்ப உணவு பழக்கங்களை ஏற்படுத்தியிருந்தனர். திணைவாரியாகப் பகுக்கப்பட்ட நிலங்களில் வாழ்ந்த பறவைகளும் விலங்களும் கூட அந்தந்த நிலத்தில் கிடைத்த உணவை உட்கொள்பவைகளாக சூழலியலுக்கேற்ப தங்களை தகவமைத்து கொண்டன.

இயற்கையோடு இணைந்த மாந்தர்களின் வாழ்வியலை விளக்க விலங்குகளும் பறவைகளும் பாடுபொருளாகியன. இயற்கையோடு இணைந்து மக்கள் வாழ்ந்தது போன்றே விலங்களும் பறவைகளும் வாழ்ந்தன. அவை உணவை வீணாக்கவில்லை. மழைக்காலத்திலும் வறண்ட காலத்திலும் கூட அவை தங்கள் உணவத் தேவையைப் பூர்த்தி செய்து கொண்டன. அத்தகைய விலங்கு,பறவைகளின் உணவு, உணவை அவை பெற்ற விதம் , அவற்றைப் பயன்படுத்திய பாங்கு போன்ற உணவு மேலாண்மையை ஆராய்வதாக இவ்வாய்வு அமைகிறது.

**உணவு மேலாண்மை**

சங்க இலக்கியங்களில் இயற்கையும் உயிரினங்களும் வெறும் பின்னணியாக மட்டுமன்றி, மனித வாழ்வியலோடு பின்னிப்பிணைந்த கூறுகளாகவே பார்க்கப்படுகின்றன. குறிப்பாக, அக இலக்கியங்களில் விலங்குகள் மற்றும் பறவைகளின் **'உணவு மேலாண்மை' (Food Management)** என்பது அவற்றின் வாழ்வியல் நுணுக்கம், சூழலியல் அறிவு மற்றும் அன்பின் வெளிப்பாடாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. சங்க அக இலக்கியங்களில் புலி, யானை, மான் ,எருமை, நீர்நாய், சுறா போன்ற விலங்களும் நாரை, புறா, பருந்து, காகம் போன்ற பிற பறவைகளும் காணப்படுகின்றன. அவற்றின் உணவுப் பழக்கங்களும் பாடுபொருளாகின்றன.

**குறிஞ்சி நில விலங்குகளின் உணவு**

புலி தனது இரையாக மான்களையும் பன்றிகளையும் உடகொள்ளும். புலி தான் கொன்ற விலங்குகளின் இறைச்சியைக் கவ்வி அல்லது இழுத்துச் சென்று மறைத்து வைத்து உண்ணும் என்று

அகநானூற்றின் 72 ஆவது பாடல் விளக்கிறது. குரங்கானது தேன், பலாவின் சுளை ஆகியவற்றை உண்ணும் இயல்புடையது. ஆண் குரங்கு பலா மரத்தில் ஏறி, முற்றிய பழத்தைப் பறித்துத் தன் இனத்தோடு பகிர்ந்து உண்ணும். மலையில் கிடைக்கும் பலாப்பழத்தைத் தன் சுற்றத்தோடு பகிர்ந்துண்ணும் குரங்குகளின் பண்பை,

**பழுமரம் தேரும் பறவை போலவும்**

**கடுவன் முறிக்கும் கல்லென் கிளை போல்...** *(நற்றிணை - 210)*

என்கிறது. உணவைத் தேடி அலையும் பறவைகள் பழம் உள்ள மரத்தைத் தேடிச் செல்வதைப் போல, உயிரினங்கள் தங்களுக்குத் தேவையான உணவை மோப்பத்தாலும் அறிவாலும் கண்டறியும் **'தேடல் மேலாண்மையை'** இது காட்டுகிறது.

யானையானது காடுகளின் அருகில் விளைந்த தினைப்புனத்திற்கு சென்று அவற்றை அழித்து உண்ணும். மேலும் அது மூங்கிலையும் உண்ணும் இயல்புடையது. குட்டியை ஈன்ற பெண்யானைக்கு உணவாக முற்றாத மூங்கிலை ஆண் யானை வழங்கியதை அகநானூறு எடுத்துரைக்கிறது. குறிஞ்சி நில யானைகள் மூங்கிலின் மென்மையான குருத்துகளையும், தினைப் புனத்துக் கதிர்களையும் விரும்பி உண்ணும். குறிப்பாக, கள் மணம் வீழும் பலாப் பழங்களைத் தேடிச் செல்லும் யானைகளின் செயல்கள் 'உணவுத் தேர்வு' முறையை விளக்குகின்றன

**நீர்வாழ் உயிரினங்களின் உணவு மேலாண்மை**

மருத நிலம் மற்றும் நெய்தல் நிலத்து நாரைகள், கலங்கிய நீரில் மீன் பிடிக்காமல், தெளிந்த நீரோட்டத்தில் மீன்கள் அசைவதைக் கண்டு குறிபார்த்துப் பிடிக்கும் தன்மையைக் கடைபிடிக்கின்றன. நீண்ட கால்களைக் கொண்ட நாரை, வாய்க்கால் மதகின் அருகே அசையாமல் நின்று கொண்டிருக்கும். மீன்கள் கூட்டமாக வரும்போது, அவற்றுள் தனக்கு ஏற்ற 'அயிரை' மீனை மட்டும் குறிபார்த்துப் பிடிக்கும். குருகுகள் வயல்களில் மீன்களைத் தேடும்போது, அவை தண்ணீரை அலப்பாமல் மெதுவாக அடியெடுத்து வைக்கும். மீன்கள் பயந்து ஓடாமல் இருக்க, நிழல் விழாதபடி தங்களை நிலைநிறுத்திக் கொள்ளும்.இது உணவை வீணாக்காமல், சரியான நேரத்தில் சரியான உணவைத் தேர்ந்தெடுக்கும் திறனைக் குறிக்கிறது. இதை,

**நெடுங்கால் நாரை மடைக்கண் மேயும்**

**அயிர்மிசைப் பனிக்கும் துறைவன்..."** — *(குறுந்தொகை - 103).*

**மீன்ஆர் குருகின் மென்பறைத் தொழுதி**

**குயுரி வரிப்பத் தண்பணை தழீஇய..."** — *(ஐங்குறுநூறு - மருதம்)*

என்கிறது. மீன் வேட்டையில் நாரை காக்கும் பொறுமை, மிகச்சிறந்த **'துல்லியமான வேட்டை மேலாண்மை' (Precision Hunting)** ஆகும்.

**பாலை நிலத்தில்உணவு சேகரிப்பு**

பாலை நிலத்துப் பாடல்கள், உணவு மற்றும் நீர் தட்டுப்பாடான காலங்களில் விலங்குகள் மேற்கொள்ளும் வாழ்வாதாரப் போராட்டத்தை விவரிக்கின்றன. ஓமை மரங்கள் நிறைந்த பாலைப் பாதையில், நீர் கிடைக்காத சூழலில், ஆண் யானை மரத்தின் பட்டையை உரித்து அதிலுள்ள ஈரமான பகுதியைத பெண் யானைக்கு ஊட்டும். தான் உண்ணாமல் தன் துணைக்கு உணவளிக்கும் இந்த தன்மை, அன்பின் உச்சமாக அகப்பாடல்களில் கூறப்படுகிறது. சங்கப் பாடல்களில் **யானை** இந்த அறத்திற்குச் சிறந்த உதாரணமாகக் காட்டப்படுகிறது. பாலை நிலத்தின் கடுமையான கோடையில், உணவுக்கும் நீருக்கும் தட்டுப்பாடு நிலவும்போது இது 'தனக்கு முன் பிறர்க்கு' என்ற மேலாண்மை தத்துவத்தின் வெளிப்பாடு ஆகும். இதை **சேமிப்பு மேலாண்மை (Sustainable Storage) என்பர்.**

**தேனீக்களின் மேலாண்மை**

உயரமான மலை இடுக்குகளில் தேனீக்கள் தேனைச் சேகரித்து வைக்கும். இது மழையற்ற காலத்திலும், குளிர்காலத்திலும் அதற்கு தேவையான ஆற்றலை வழங்குகிறது. ஒரு சிறு துளி தேனைக் கூட வீணாக்காமல் அவை சேமிக்கும் விதத்தை

**வரைமிசை அருவித் தண்முயல் மருங்கின்**

**தேனீத் தொகுத்த தீஞ்சுவைத் தேறல்** *(நற்றிணை)*

என்கிறது. மலையடுக்கின் இடுக்குகளில் தேனீக்கள் தேனைச் சேகரித்து வைப்பதும், அதை மற்ற உயிரினங்களான கரடி, குரங்கு ஆகியவை திருட முற்படுவதும் குறிஞ்சித் திணையின் இயல்பான உணவுப் போராட்டமாகும். மலையடுக்கில் உள்ள தேன்கூட்டைப் பசிமிக்க கரடி சிதைத்து உண்பதை

**முயல்பு முதிர் அடுக்கத்துத் தீஞ்சுவைத் தேறல்**

**உயர்பலவுத் தீங்கனி உண்ணுநர் தகைப்ப... ...**

**கடும்பாம்பு வழங்கும் இரும்பனைக் குன்றத்துப்**

**படும்மழை ஆடும் மால்வரைச் சிறுநெறி**

**இருங்கட் சிறுகண் யானை... கரடி..."**

என்கிறது. தேனீக்கள் தேனைச் சேமிக்கும் விதம், ஒரு சிறந்த கட்டுமான மேலாண்மைக்கு (Construction & Storage Management) உதாரணமாகத் திகழ்கிறது.

**எறும்புகளின் சேமிப்பு**

மழையற்ற காலத்திற்காகத் தானியங்களைச் சேகரித்து வைக்கும் எறும்புகளின் விடாமுயற்சி, மனிதர்கள் பொருள் ஈட்ட வேண்டியதன் அவசியத்திற்கு உவமையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது பெரும்பாலும் பாலை நிலப் பாடல்களில் தலைவன் பொருள் ஈட்டச் செல்ல வேண்டியதன் அவசியத்தை உணர்த்தும் **'பொருள்வயின் பிரிவு'** பாடல்களில் கையாளப்பட்டுள்ளது. இதை,

**வெண்கை எறுழ்வீத் தாஅய்ப் பூஞ்சினை**

**மென்கை எறும்பிற் றொகுதி யீர்க்குந்**

**தண்கயஞ் செகுத்த வார்மணல் அடைகரை... அகநானுறு, 155**

என்பதால் அறியலாம். மழைக்காலத்திற்கு முன்னரே உணவைச் சேமிக்கும் எறும்புகளின் அறிவுத்திறன் பல இடங்களில் உவமையாக வருகிறது. எறும்புகள் தமக்குக் கிடைத்த தானிய மணிகளைத் தங்கள் இருப்பிடத்திற்கு வரிசையாகச் சுமந்து செல்வதை "**முயல்பு முதிர் நறவின் முகிழ் முகிழ் எறும்பு கயிறுபுறம் வரிப்ப..."** என்கிறது அகநானூறு. இது வருங்காலத் தேவைக்காக உணவைச் சேமிக்கும் **'சேமிப்பு மேலாண்மைக்கு' (Storage Management)** மிகச்சிறந்த எடுத்துக்காட்டாகும்.

**காகத்தின் சமூக மேலாண்மை**

காகம் தனக்குக் கிடைத்த உணவைத் தான் மட்டும் உண்ணாமல், கரைந்து தன் சுற்றத்தை அழைத்து உண்ணும். சங்க இலக்கியத்தில் 'காக்கை பாடினியார்' என்னும் பெண்பால் புலவர் இந்தப் பண்பைப் போற்றிப் பாடியுள்ளார். இதனை,

**திண்சோர் நறவின் நற்றிணைப் பொறையன் தொண்டியுள்**

**அன்ன கவவுக்கை நெடும்புறை காக்கை பாடினியார்...***(குறுந்தொகை - 210)*

என்பதால் அறியலாம். கிடைத்த உணவை ஊரையே அழைத்து உண்ணும் காகத்தின் பண்பு, மருத நிலத்தின் வளத்தையும் அதன் பகிர்வு அறத்தையும் காட்டுகிறது . இது விலங்கினங்களிடம் காணப்படும் **'சமூக உணவு மேலாண்மை'** ஆகும்.

**பகிர்ந்துண்ணல்**

விலங்குகளின் உணவு மேலாண்மையில் 'பகிர்ந்துண்ணுதல்' என்பது மிக முக்கியமான ஒரு பண்பாகும். ஆண் குரங்கு பலாப்பழத்தின் சுளையை எடுத்துத் தன் சுற்றத்தில் உள்ள பெண்

குரங்குகளுக்கும் குட்டிகளுக்கும் பகிர்ந்தளிக்கும் தன்மை மனித சமூகத்தின் கூட்டுக்குடும்ப முறைக்குச் சான்றாக அமைகிறது. தமக்குக் கிடைத்த உணவைத் தனியாக உண்ணாமல், கரைந்து தன் சுற்றத்தை அழைத்து உண்ணும் காகத்தின் பண்பு, மருத நிலப் பாடல்களில் விருந்தோம்பலுக்கு உவமையாகக் காட்டப்படுகிறது. எதிர்காலத் தேவைக்காக உணவைப் பாதுகாக்கும் முறையும் சங்கப் பாடல்களில் பதிவாகியுள்ளது. பகுத்துண்ணுதல் என்பது கிடைத்த உணவை உடனே தீர்ப்பது மட்டுமல்ல, எதிர்கால சந்ததிக்கும் பஞ்சம் வரும் காலத்திற்கும் சேர்த்து வைப்பதாகும். எறும்புகள் மழைக் காலங்களில் தரைக்கு அடியில் உணவின்றித் தவிப்பதைத் தவிர்க்க, கோடையில் தானியங்களைச் சேகரித்து வைக்கின்றன. தேனீக்கள் பூக்கள்தோறும் அலைந்து சேர்த்த தேனை, ஒரு சமூகமாக (Colony) இணைந்து கூட்டில் சேமிக்கின்றன. இது 'கூட்டுறவு மேலாண்மைக்கு' (Cooperative Management) மிகச்சிறந்த சான்று.

**உணவு மேலாண்மையும் உள்ளுறை உவமமும்**

சங்க இலக்கியத்தில் விலங்குகளின் உணவு முறை வெறும் செய்தியாக மட்டும் அமையாமல், **'உள்ளுறை உவமம்'** வழியாகத் தலைவனின் பண்பை விளக்கப் பயன்படுகிறது. உதாரணமாக, ஒரு ஆண் யானை தன் துணைக்கு உணவளிக்கும் காட்சி சொல்லப்பட்டால், அது தலைவன் தலைவியின் மீது காட்டும் அக்கறையைக் குறிப்பதாக அமையும். இதை

**வேனில் ஓதிப் பாடுநடைச் செந்நாய்**
**ஊன்நசைச் செந்நா உயர்புபு வருந்த.**
**.. ...பெருங்கை யானை பிடிபசி**
**களைஇயர் யாஅம் பொரிக்கும்** *(குறுந்தொகை – 37)*

என்கிறது. வெயிலின் கொடுமையால் செந்நாய்கள் நாக்கு உலர்ந்து தவிக்கும் பாலை வழியில், பெரிய கையையுடைய ஆண் யானையானது, தன் பெண் யானையின் பசியைப் போக்குவதற்காக 'யா' மரத்தின் பட்டையைத் தன் துதிக்கையால் உரித்து, அதிலுள்ள ஈரப்பகுதியை (உணவை) அதற்கு ஊட்டும். இது வறட்சிக் காலத்திலும் தன் துணையைக் காக்கும் **'உணவுப் பகிர்வு மேலாண்மை'** ஆகும்.

**மேலாண்மைப் பண்பு**

மான்கள் எப்போதும் மேய்ச்சல் நிலங்களைச் சுழற்சி முறையில் பயன்படுத்துகின்றன. புற்கள் துளிர்க்கும் காலத்தை அறிந்து அவை இடம்பெயர்வது அவற்றின் **'கால மேலாண்மைக்கு'** ஒரு சான்றாகும். ஆண் செந்நாய், தன் பெண் செந்நாயின் பசியைப் போக்கக் கூட்டமாகச் சேர்ந்து வேட்டையாடும். செந்நாய்கள் ஒரு கூட்டமாக இணைந்து ஒரு பெரிய விலங்கை வீழ்த்துவதை அகநானூறு,

**செந்நாய் ஏற்றை அரிநிறப் பிணவொடு**

**ஊன்நசை உள்ளம் துரப்ப..." —** *(அகநானூறு - 101)*

என்கிறது. இது தனித்து வேட்டையாடுவதை விட, வெற்றிக்கான வாய்ப்பை அதிகப்படுத்தும் ஒரு **'கூட்டு முயற்சி மேலாண்மை'** ஆகும். பாலை நிலத்துச் செந்நாய்கள் கூட்டமாக இணைந்து வேட்டையாடும் முறையை (Social Hunting) பின்பற்றுவதன் மூலம் உணவுத் தட்டுப்பாட்டைச் சமாளிக்கின்றன.

**சூழலியல் சமநிலை (Ecological Balance)**

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் என்பதில் **'ஓம்புதல்'** (பாதுகாத்தல்) மிக முக்கியமானது. விலங்குகள் தங்களுக்குத் தேவையானதை விட அதிகமாக இயற்கையிடமிருந்து பறிப்பதில்லை. தினைப்புனத்தில் தங்களுக்குத் தேவையான கதிர்களை மட்டுமே உண்கின்றன. மனிதர்கள் அவற்றைத் துரத்தினாலும், அவை மீண்டும் வருவது தங்களின் வாழ்வாதார உரிமைக்காகவே தவிர, பேராசையினால் அல்ல. முல்லை நிலத்தில் மான்கள் கூட்டம் கூட்டமாகச் சென்று மேய்வதைத் தங்களின் வாழ்வியலாகக் கொண்டுள்ளன. குறிப்பாக, புதுமழை பெய்தவுடன் முளைக்கும் 'அருகம்புல்' மற்றும் 'பிடவம்' பூக்களை அவை தேர்ந்தெடுத்து உண்பதைச் சங்கப் பாடல்கள் காட்டுகின்றன.

**வேட்டை அறம் (Ethical Foraging)**

விலங்குகளின் வேட்டையிலும் ஒரு ஒழுங்குமுறை உண்டு. வலிமையான விலங்குகள் தங்களுக்குப் பசிக்கும்போது மட்டுமே வேட்டையாடுகின்றன. வேட்டையாடிய பின் எஞ்சியவற்றை மற்ற சிறு விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் (பருந்து, நரி) விட்டுச் செல்கின்றன. இது காட்டில் நிலவும் ஒரு வகை **'உணவுச் சங்கிலி மேலாண்மை' (Food Chain Management)** ஆகும்.

**முடிவுரை**

சங்க இலக்கியங்களில் விலங்குகளின் உணவு முறை என்பது வெறும் பசி தீர்த்தல் மட்டுமல்ல. அது **அன்பு, சேமிப்பு, பகுத்துண்டு வாழ்தல்** போன்ற உயர்ந்த மேலாண்மைப் பண்புகளை உள்ளடக்கியது. தலைவன்-தலைவியின் காதலை விளக்குவதற்கு ஒரு குறியீடாகவே புலவர்கள் இந்த உணவு மேலாண்மையைப் பயன்படுத்தியுள்ளனர்.

**துணை நூற்பட்டியல்**

[1]. அகநானூறு – நியு செஞ்சரி புக் ஹவுஸ், 41- B சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை.

[2]. ஐங்குறுநூறு - நியு செஞ்சரி புக் ஹவுஸ், 41- B சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை.

[3]. குறுந்தொகை – நியு செஞ்சரி புக் ஹவுஸ், 41- B சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை.

[4]. சங்க இலக்கியத் தொகுப்பு - நியு செஞ்சரி புக் ஹவுஸ், 41- B சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை.

[5]. நற்றிணை- நியு செஞ்சரி புக் ஹவுஸ், 41- B சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை.